## 7.15 காஞ்சிபுரம் மாவட்டம்–அனுமதிக்கப்பட்ட 36 சாலை பணிகளில் மூன்றினை ரத்து செய்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அதி.2) துறை

அரசாணை (2டி) எண் 77 நாள் : 26.11.2007

படிக்க:

1. அரசாணை (நிலை) எண் 115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நாள் 18.8.05
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடித எண் ந.க. 39288/06.டி.யூ.1, நாள் 7.5.07

**ஆணை**

படிக்கப்பட்ட இரண்டில் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், அரசாணை (நிலை) எண் 115, ஊரக வளர்ச்சி துறை, நாள் 18.8.2005ல், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு (CRIDP) 2005–06 திட்டத்தில் கீழ் ஏனைய மாவட்டங்களுடன் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பழுதடைந்த 36 சாலைகளை மேம்பாடு செய்ய ரூ.357.907 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அதில் 34 சாலைப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாவும் தெரிவித்துள்ளார். மேற்காணும் 36 சாலை பணிகளில் கீழ்க்கண்ட இரு சாலைப் பணிகள் 2004–05ம் ஆண்டு சாலை பராமரிப்பு திட்டத்தின் கீழ் (MRR) நெடுஞ்சாலைத் துறையினால் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

1. திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் – சி.டி.சாலை முதல் மடையத்தூர் சாலை கி.மீ 0/5–1/5 (1 கி.மீ).
2. இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் – கடுகுப்பட்டு சாலை கி.மீ 0/0–1/8 (1.80 கி.மீ)

மேலும் வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் எம்.வி.டபிள்யூ சாலை முதல் தோண்டாங்குளம் சாலை கி.மீ 0/0–3/2, 3.20 கி.மீ வரையுள்ள சாலை பிரேரணை தயாரிக்கும் போது நல்ல நிலையில் இருந்ததால் மேம்பாட்டு வேலை செய்ய உத்தேசிக்கப்பட்டதென்றும் பின்னர் 2005–ம் ஆண்டில் பெய்த கனமழை காரணமாக மிகவும் பழுதடைந்துள்ளதால், ஜல்லி உடைக்கும் கருவி நிறுவப்பட்டு உடைக்கப்பட்ட ஜல்லி மற்றும் சக்கைக்கல் ஆகியவற்றை ஏற்றி செல்லும் லாரிகளின் போக்குவரத்து இரவு பகலாக நடைபெறுவதால் தற்போது இச்சாலை மேம்பாட்டுப் பணியினை செய்ய இந்த மதிப்பீட்டில் உள்ள வேலை இனங்கள் போதுமானதாக இல்லாததால் இச்சாலை மேம்பாட்டுப் பணியினை மேற்கொள்ள இயலாது என்றும் தெரிவித்துள்ளார். எனவே, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் / பெருந்தலைவர் தெரிவித்துள்ள காரணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட மூன்று பணிகளுக்கும் வழங்கப்பட்டிருந்த அனுமதி ஆணையினை ரத்து செய்து ஆணை வழங்கும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்

1. திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் – சி.டி.சாலை முதல் மடையத்தூர் சாலை கி.மீ 0/5–1/5 (1கி.மீ)
2. இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் – கடுகுப்பட்டு சாலை கி.மீ 0/0–1/8 (1.80 கி.மீ)
3. வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் எம்.வி.டபிள்யூ சாலை முதல் தோண்டாங்குளம் சாலை கி.மீ 0/0–3/2 (3.20 கி.மீ)

2. மேலே பத்தி ஒன்றில் கூறப்பட்டுள்ள சூழ்நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு ஏற்றுக்கொண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிஆர்ஐடிபி 2005–06 திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 36 சாலைப் பணிகளில் கீழ்க்காணும் மூன்று சாலைப் பணிகளை ரத்து செய்து அரசு ஆணையிடுகிறது.

1. திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் – சி.டி.சாலை முதல் மடையத்தூர் சாலை கி.மீ 0/5–1/5 (1கி.மீ)
2. இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் – கடுகுப்பட்டு சாலை கி.மீ 0/0–1/8 (1.80 கி.மீ)
3. வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் எம்.வி.டபிள்யூ சாலை முதல் தோண்டாங்குளம் சாலை கி.மீ 0/0–3/2 (3.20 கி.மீ)

மேலும் மேற்கண்ட மூன்று சாலைப் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள தொகையை மீண்டும் கீழ்க்கண்ட

அரசுக் கணக்குத் தலைப்பின்கீழ் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

4515 00 Capital outlay on other Rural Development Programmes – 800 Other Expenditure – Schemes in the Eleventh Five Year Plan – II State Plan – JS Deduct Receipt and Recoveries on Capital Account. 77 Deduct Recoveries 03. Other Recoveries (DPC 4515 00 800 JS 7735)

**3.** இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண் **65443**/ஊவ/**07**, நாள் **13.11.07**ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் செட்டி**
அரசு செயலாளர்